**தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிறகு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழு கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பேரவை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியம் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால

நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய வருடத்தில் ஆணைக்குழுவிற்கு பெறப்பட்ட முறையே ரூபா 920,649 மற்றும் ரூபா 9,441,684 ஆன மூலதன மானியங்கள் | இந்த குறைபாடுகளை அடுத்த ஆண்டு முதல் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 (திருத்தம்) இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் நேரில் முறையில் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது, தொழிற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சலின் கீழ் ஆண்டுக்கான மிகை அல்லது பற்றாக்குறைக்கு சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் தேய்மானம், பணமல்லாத வேறுபாடுகளாக சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும் , ரூபா 1,702,467 ஆன சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் தேய்மானம் முதலீட்டு நடவடிக்கைகளுக்கான காசுப்பாய்ச்சலின் கீழ் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | நிலையான சொத்துகளின் தேய்மானம் நிறுவனத்தின் காசு வெளிப்பாய்ச்சலாக கருதப்பட்டு முதலீட்டு நடவடிக்கைகளுக்கான காசுப்பாய்ச்சலில் உள்ளடக்கப்பட்டது. அடுத்த ஆண்டு முதல், பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02இன் பிரகாரம் தேய்மான பெறுமதியை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிதி நிலைமைக் கூற்று தயாரிக்கும் போது, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் சொத்துக்கள்,பொறுப்புகள் மற்றும் உரிமை/தேறிய சொத்துக்கள் திரவத்தன்மையின் ஒழுங்கில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் சொத்துக்கள்,பொறுப்புகள் அடுத்த ஆண்டு முதல் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம நிதி நிலைமைக் கூற்று திரவத்தன்மையின் ஒழுங்கில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய வருடத்தில் கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக கணக்காய்வுக் கட்டணம் அட்டுறு செலவொன்றாக குறிப்பிடப்படுவதற்கு முடியாதிருந்தது.எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 371(5) | இடைக்காலக் கட்டுநிதியொன்று வழங்கப்பட்ட பின்னர் பணி முடிந்து 10 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் இ ரூபா 90,000 ஆன 02 இடைக்கால கட்டுநிதிகள் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் தீர்வு செய்யப்படவில்லை. | இந்த ஆணைக்குழுவின் 26 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 10 பேர் மட்டுமே சேவையாற்றுகின்றனர்.. அதன்படி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவர்களின் பணிக்கு மேலதிகமாக பல பணிகளும் ஒதுக்கப்பட்டுள்ளதால், இந்த நிலை ஏற்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகளுக்கான நிறுவனங்களின் நல்லாளுகை தொடர்பான வழிகாட்டி | | | சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (i) | 4.2 ஆம் பிரிவு | ஆணைக்குழுவினால் கணக்காய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டு வருடத்திற்கு குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு கணக்காய்வுக் குழுவொன்று நியமிக்கப்படவில்லை. | ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களில் 10 பேர் தற்போது பணிபுரிந்து வருகின்றனர், மேலும் பணிப்பாளர் நாயகம், சிரேஷ்ட ஆராய்ச்சி உதவியாளர், சட்ட அலுவலர், ஆராய்ச்சி உதவியாளர் மற்றும் நிர்வாக அதிகாரி பதவிகளும் வெற்றிடமாக உள்ளன. எனவே, அத்தியாவசிய அன்றாட நடவடிக்கைகள் மற்றும் மேன்முறையீட்டு மனுக்கள் ஆகியவற்றைத் தவிர ஏனைய பணிகளைச் செய்வதற்கான திறன் ஆணைக்குழுவிற்கு காணப்படாமையுடன் கணக்காய்வுக் குழுவை | வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிறுவுதல் மற்றும் குழுவை வழிநடாத்துவதற்கு முடியாதிருந்தது. | |
| (ii) | 4.4 ஆம் பிரிவு | நிறுவனத்தின் நிதி மற்றும் செயற்பாட்டுத் தகவல்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தல் , செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் செயல்திறன் மற்றும் பயனுறுதி என்பவற்றை உறுதிப்படுத்தல், சட்டங்கள்,விதிகள் மற்றும் நடைமுறைகளை மீளாய்வு செய்வதற்காக உள்ளக கணக்காய்வொன்று நடாத்தப்பட வேண்டிய போதிலம், 2022 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வொன்று செயற்படுத்தப்படவில்லை. | ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களில் 10 பேர் தற்போது பணிபுரிந்து வருகின்றனர், மேலும் பணிப்பாளர் நாயகம், சிரேஷ்ட ஆராய்ச்சி உதவியாளர், சட்ட அலுவலர், ஆராய்ச்சி உதவியாளர் மற்றும் நிர்வாக அதிகாரி பதவிகளும் வெற்றிடமாக உள்ளன. எனவே, அத்தியாவசிய அன்றாட நடவடிக்கைகள் மற்றும் மேன்முறையீட்டு மனுக்கள் ஆகியவற்றைத் தவிர ஏனைய பணிகளைச் செய்வதற்கான திறன் ஆணைக்குழுவிற்கு காணப்படாமையுடன் கணக்காய்வுக் குழுவை நிறுவுதல் மற்றும் குழுவை வழிநடாத்துவதற்கு முடியாதிருந்தது. | வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 5.2 ஆம் பிரிவு | ஆணைக்குழுவினால் 2022 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் உரிய மாதிரியின்படி தயாரிக்கப்படவில்லை என்பதுடன் அதற்கான அங்கீகாரம் பெறப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் , அவ்வாண்டில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்தும் அதற்கான அங்கீகாரம் வழங்கப்படவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் உரிய மாதிரியின்படி தயாரிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பொது முயற்சிகள் தொடர்பான செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வ அறிக்கைகள் அடங்கிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2023 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை ஆணைக்குழுவினால் 2020 மற்றும் 2021 ஆம் | 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்காக வரிசை அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை இரண்டு மொழிகளில் மொழி பெயர்க்கப்படுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | பொது முயற்சிகள் தொடர்பான செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் செயல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,912,855 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 73,237 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,839,618 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் ரூபா 1,702,467 ஆன சொத்து பொறி மற்றும் உபகரணங்கள் தேய்விடப்பட்டமை இப்பின்னடைவிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டில், ஆணைக்குழுவிற்கு 1,089 மேன்முறையீடுகள் பெறப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 வரை, விசாரிக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட உத்தரவுகளின் எண்ணிக்கை 709 ஆகும். அது பெறப்பட்ட மேன்முறையீடுகளில் 65 சதவீதமாகும். 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில், ஆணைக்குழுவிற்கு முறையே 729, 800 மற்றும் 1,525 மேன்முறையீடுகள் பெறப்பட்டிருந்தன. ஒவ்வொரு ஆண்டும் பெறப்பட்ட மேன்முறையீடுகளிலிருந்து அந்த ஆண்டில் வெளியிடப்பட்ட உத்தரவுகளின் எண்ணிக்கை பற்றிய தகவல்களைப் பெறுவதற்கான தரவு அமைப்பொன்று அல்லது முறைமையொன்று ஆணைக்குழுவினால் தயாரிக்கப்படாத காரணத்தால் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மேன்முறையீடுகளின் விசாரணையின் முன்னேற்றம் தொடர்பாக கணக்காய்வின்போது தகவல்களைப் பெறுவதற்கு முடியாதிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்பட்ட உத்தரவுகளின் காலப் பகுப்பாய்வொன்றை பெற்றுக் கொள்வதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டத்தில் திட்டமிடப்பட்ட 06 நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவும் பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக வெளித் தரப்பினரிடம் இருந்து தேவையான ஏற்பாடுகளை பெறுவதற்கு முடியாதிருந்தது. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |

## 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 13 இன் பிரகாரம், ஆணைக்குழுவின் நிறைவேற்று அதிகாரி, பணிப்பாலர் நாயகமாக காணப்பட வேண்டியதுடன், ஆணைக்குழுவின் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையென தீர்மானிக்கும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையொன்று ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட வேண்டும். அதன்படி, 2022 திசெம்பர் 31 வரை ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 26 ஆக இருந்த போதிலும், உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 14 ஆக இருந்தமையால் 12 வெற்றிடங்கள் காணப்பட்டன. இவ்வெற்றிடங்களான பதவிகளில் பணிப்பாளர் நாயகம், சட்ட அதிகாரி, நிர்வாக அதிகாரி, நிதி அதிகாரி மற்றும் ஆராய்ச்சி அதிகாரி போன்ற பதவிகள் பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தன. | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 2022/03 இன் படி, பொதுத்துறை அலுவலகங்களுக்கான பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வது இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால், வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியவில்லை. எவ்வாறாயினும், இந்த ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் செயற்திறனாக நிறைவேற்றப்படுவதற்கு தேவையான பதிவாளர் பதவிக்கு 04 அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கு விசேட அனுமதியொன்று அந்த கோரிக்கையும் அமைச்சினால் நிராகரிக்கப்பட்டது என்பதை குறிப்பிடுகின்றேன். | செயல்திறனை மோசமாக பாதிக்கும் அத்தியாவசிய் பதவிகளின். வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |